**<u>முன்னுரை:</u>**

ஒவ்வொருவருக்கும் ஒரு பாதை உண்டு! ஆனால் சிலுவைப்பாதை, இயேசு நடந்த தனிப்பாதை. மன்னிப்பின் பாதை, இறையரசின் கனவுகளும், விழுமியங்களும் வித்திடப்பட்ட பாதை. இரக்கத்தின் பாதை - துயரத்தின் பாதை.
வானகம் மண்ணில் மலர்ந்திட வேண்டும் என்று தந்தையின் திருவுளம் ஏற்று, தூய ஆவியின் உந்துதலால் காடு, மலை, மேடு, கடல், நிலம் என இறையரசுப்பணியை மூன்றாண்டு முன்னெடுத்த இயேசு தனித்து நடந்த பாதை, பாடுகள் பட்ட பாதை, நிராகரிக்கப்பட்ட பாதை, அவமானப்படுத்தப்பட்ட பாதை, சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்பட்ட பாதை!
இப்பாதை இயேசு தேடி சுமந்த பாதை!

**அந்தப் பெரிய வெள்ளிக்கிழமையன்று**

- எந்த பெரிய மனிதரும் செத்துக் கொண்டிருக்கும் இந்த மனிதனை பார்க்க வரவில்லை
- எந்த நாடும் இக்கோர நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் ஒளிபரப்பவில்லை, செய்தித்தாளில் பிரசுரிக்கவில்லை
- எத்தகைய அறிவிப்பும் எங்கும் அனுப்பப்படவில்லை
- துக்கநாளாக அனுசரிக்கப்படவில்லை

ஒரு சில இதயங்கள் மட்டுமே கசிந்தன. ஆனால், வான் பார்த்தது, கண் சிவந்தது; மேகங்கள் கோபத்தில் இடிமின்னலாய் வெடித்தன; காற்று தன் பேரிழப்பை மழையாய்க் கொட்டியது. ஆலயத்தின் திரைச்சீலை அதிர்ச்சி தாள முடியாமல் கிழிந்தது. மண்மாதா மட்டும் அந்த மனிதனை சுமந்து கொண்டு அழுது கொண்டிருந்தாள்.
தன்னை படைத்தவரை, மீட்டவரை இழந்த பெருந்துயரத்தில் துக்கம் கொண்டாடிக் கொண்டிருந்தாள். இவரின் இந்த துன்பக்கிண்ணத்தில் சேர்ந்து பருக நாம் இன்று திரண்டு வந்திருக்கின்றோம்.
பல மனிதர்கள் இந்த ஊர்வலத்தில் நம்மோடு பேசப்போகிறார்கள். நாம் மனந்திரும்பி புதுவாழ்வு பெற இந்த திருச்சிலுவைப்பாதை உதவட்டும்!
இதில் தகுந்த விதத்தில் பங்கெடுக்க, வேண்டிய மனமாற்றத்தை பெற சில நிமிடங்கள் மௌனமாக நம்மைத் தயாரிப்போம்.

புனித மரியாயே! வியாகுல மாதாவே! உம்மோடு நாங்கள் உம் மைந்தனை இப்பாதையில் தொடர ஆசிக்கிறோம். இப்பாதையில் எவ்வித பராக்கிற்கும் இடம் கொடாமல் தக்க ஆயத்தத்துடன் பரமனை பின்செல்ல வேண்டிய அருளை பெற்றுத்தாரும். ஆமென்.



**<u>முதல் நிலை:</u>**
**<u>இயேசு சிலுவை சாவிற்கு தீர்ப்பிடப்படுகிறார்</u>**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

நமது முன்னால் ஒரு திசை மாறிய தீர்ப்பு அரங்கேறுகின்றது.

**பிலாத்து:** இவனிடத்தில் நீங்கள் கண்ட குற்றம் என்ன?
**தலைமை குரு:** இவன் குற்றவாளியாக இராதிருந்தால் நாங்கள் இவனை கையளித்திருக்க மாட்டோம்.
**மக்கள் 1:** இவன் நம் மக்கள் சீரழிய காரணமாக இருக்கிறான்.
**மக்கள் 2 :**இவன் யூதரின் அரசன் என்று தன்னையே சொல்லிக்கொள்கிறான்.
**பிலாத்து:** நீ யூதரின் அரசனா?
**இயேசு:** நீரே சொல்கிறீர்.
**பிலாத்து:** இவனிடத்தில் நான் சாவுக்கு ஏதுவான குற்றம் ஒன்றையும் காணவில்லையே! எனவே இவனை கண்டித்து விடுதலை செய்கிறேன்.
**<u>மக்கள்:</u>** இவனை சிலுவையில் அறையும் - 3
**<u>தலைமைகுரு:</u>** நீர் இவனை விடுவித்தால் சீசருக்கு நண்பராக இருக்க முடியாது.
**<u>பிலாத்து:</u>** (என்ன இப்படி சொல்கிறார்கள்? இவன் உண்மையில் குற்றமற்றவன். இவன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் எல்லாம் நாட்டுக்கோ மக்களுக்கோ ஊறு விளைவிக்கவில்லை.இது மதவாதிகளின் சதிதான். இது ஒரு புதுமையான வழக்கு. என் அதிகாரத்தை பயன்படுத்தி இவனை விடுவித்தால், இம்மக்களையும் யூதமத தலைவர்களையும் சமாளிக்க முடியாது. உரோமை பேரரசையும் திருப்திபடுத்த முடியாது. உரோமை ஆளுநன் என்ற பதவியே கைநழுவி போய்விடும். இல்லை இதனை இழந்து விட நான் தயாராக இல்லை.) உங்கள் விருப்பப்படியே இவனை சிலுவையில் அறைந்து கொல்லுங்கள். ஆனால் இவன் இரத்ததின் மட்டில் நான் குற்றமற்றவன். நான் என் கைகளை கழுவிக் கொள்கிறேன்.

**<u>சிந்தனை:</u>**

1. "தீர்ப்பிடாதே தீர்ப்புக்கு உள்ளாவாய்" என்ற இயேசுவுக்கே தீர்ப்பளிக்கும் வினோத நிகழ்ச்சி. பாவமே அறியாத, பாவங்களை மன்னித்த பரமனுக்கே தீர்ப்பு தந்த பரபரப்பான நிகழ்ச்சி இது. "உங்களுள் பாவமில்லாதவர் இவள் மேல் முதல் கல் எறியட்டும். நானும் தீர்ப்பிடேன்." என்றவருக்கு தீர்ப்பு இன்று. அவர் வாழ்வில் நடந்த அதே தீர்ப்பு இன்று நம் வாழ்விலும் நிகழ்கிறது.

2. நம் எண்ணங்கள் மாற்றப்பட வேண்டும். எண்ணங்கள் சக்தியானவை. அதிலும் நல்ல எண்ணங்கள் நம்மை வாழவைக்கும். பிறருக்கு வாழ்வளிக்கும். கொடிய எண்ணங்கள் பிறரை பற்றி நாம் தவறான முடிவுகள் எடுக்க நம்மை நிர்ப்பந்திக்கும். சுயநல எண்ணங்கள் நாம் அநீதிக்கு துணை போக நம்மை தூண்டும். எனவே நாம் பிறர் மீது கொண்டிருக்கும் நல்ல எண்ணங்களை எந்த சூழலிலும் இழந்து விட கூடாது. அநீதி நடக்கின்ற போதெல்லாம் உண்மைகள் தெரிந்திருந்தும், வாய் திறவாமல், நமக்கு ஏன் இந்த ஊர் வம்பு என்ற மனநிலையோடு பல நேரங்களில் வாழ்கிறோமே! இந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் நாமும் ஏசுவைதான் தீர்ப்பிடுகிறோம். நாம் பிலாத்துவை போல் கோழைகளாக இல்லாமல் வீரமுள்ளவர்களாக, உண்மையை எடுத்துரைப்பவர்களாக மாற வேண்டும்.

3. நல்ல கருத்துக்கள் யாரிடம் இருந்தும் வரலாம் என்ற எண்ணத்தோடு இனத்தால், மொழியால், மதத்தால் வேறுபாடு பார்க்காமல் ஏற்றுக்கொள்ளும் போது நாமும் அமைதியின் தூதுவர்களாக, இறையரசின் விதைகளாக, ஒளியின் மக்களாக மாறுகிறோம். நீதிமன்றம் மாத்திரம் தவறான தீர்ப்புக்களை எழுதுகின்றன என்று சொல்கிறோம். நாமும் அதே போன்று தவறான திர்ப்புகளை தந்துகொண்டு இருக்கிறோமே.

4. சட்டம் ஒரு இருட்டறை என்று கூறும் நாமும், நம் மனதை இருட்டறையாக்கி கொண்டு பிறர் மீது நல்லெண்ணம் இழக்க செய்யும் தவறான தீர்ப்புகளையே எழுதி கொண்டிருக்கிறோம். தங்கள் கண்களில் உள்ள மரக்கட்டையை பாராமல் பிறர் கண்களில் உள்ள துரும்பை மட்டுமே பார்ப்பவர்களுக்கு  பிறர் மீது குற்றக்கற்களை வீசுவது, காயப்படுத்துவது என்பது எளிதானது. இறுதி நாளில் நமக்கும் அதே தீர்ப்புதான் உண்டு என்பதை நாம் உணறாமல் இருக்கிறோம்.

**செபம்:**

அநியாய தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்ட இயேசுவே! நாங்கள் கோழைகளாக வாழாமல், உண்மைக்கு சான்றுபவருபவர்களாக, நீதிக்கு குரல் கொடுப்பவர்களாக, பிறருக்கு வாழ்வளிப்பவர்களாக மாறும் வரம் தாரும். எங்களது அதிகாரத்தை நேர்மையாக பயன்படுத்த உமது அருள் தாரும். - ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**இரண்டாம் நிலை**
**இயேசுவின் மீது பாரமான சிலுவைவை சுமத்துகிறார்கள்**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

இதோ சுமைத்தாங்கி. "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள்" என்றவருக்கு நடந்தது என்ன தெரியுமா?

போர்வீரன் 1: யூதரின் அரசே வாழி.
போர்வீரன் 2: தாவீதின் மகனே வாழி.
போர்வீரன் 3: ஏய் அந்த சலுவையை இவன் மேல் சுமத்து.
**சிந்தனை:**

1. அன்று முதல் இன்று வரை சிலுவைகள் சுமத்தப்படுகின்றன - சுமக்கப்படுகின்றன. சிலுவை சுமத்துபவர்கள் இருக்கும் வரை இந்த இரண்டாம் நிலையும் இருந்து கொண்டு தான் இருக்கும். பிறரின் சுமைகளை சுமக்கும் போது சுகத்தை அனுபவிப்பதுதான் இந்நிலையில் இயேசு நமக்கு கற்பிக்கும் பாடம். நமது தோள்கள் எளியவர்களின் சுமையை தாங்கி கொள்ள வேண்டும். பொறுமையோடு இருப்பவர்களால் மட்டுமே அடுத்தவர்களின் சுமையை தாங்கிக் கொள்ள முடியும்.
2. பொறுமை இல்லாத இன்றைய வாழ்க்கை நம்மை ஆத்திரக்காரர்களாக்கி புத்தியை மட்டுப்படுத்துகிறது. பொறுமையில்லாத வாழ்க்கையினால் உறவிலே விரிசல், வியாபாரத்திலே சறுக்கல், பயணங்களில் விபத்துக்கள், குடும்பங்களில் சிதைவுகள், ஆன்மீகத்தல் தளர்ச்சி, வாழ்வில் விரக்தி, வெறுமை இன்னும் பல..... பத்து மாதங்கள் தாய் பொறுமையோடு சுமப்பதனால் தான், ஓர் உயிர் இந்த உலகை காண வருகிறது. சிப்பியின் பொறுமை முத்தாகிறது, உழவனின் பொறுமை விளைச்சலாகிறது. உன்னதரின் பொறுமை தான் நமது மீட்பாகிறது.
3. நம் சுமைகளை தம் மீது சுமந்து கொள்ள திருவுளமான இயேசுவுக்கு சிலுவை பாரமானது அல்ல. அவரின் பொறுமை நமக்கு மீட்பு என்பதால், நம் மீது கொண்ட அன்பினால் நாம் யாரும் அழியாமல், எல்லோரும் வாழ்வு பெறும் பொருட்டு, பொறுமையுடன் சிலுவை சுமக்கின்றார். இன்று நம்மிடம் குறைந்து வரும் 'மை' - பொறுமை. இந்நிலையில் இயேசு நமக்கு கூறுவது என்ன?

- வலிமையோடு இரு ஆனால் வன்முறை வேண்டாம்.
- தீவிரமாக செயல்படு ஆனால் தவிரவாதி ஆகிவிடாதே.
- பொறுமையோடு இருக்க என்னிடம் கற்றுக்கொள்.

4. வலிமைவுடையவர்கள் காரியத்தை பொறுமையின்மையினால் சிதைத்துவிடலாம். பொறுமை உடையவரோ தமது பொறுமையினால் காரியத்தை வெற்றி பெற செய்யலாம். நம் வாழ்விலும் பொறுமை மிளிர மன்றாடுவோம். பொறுமை கடலினும் பெரிது. பொறுத்தாரே பூமியை ஆள்வார்.

**செபம்:**

பொறுமையின் சிகரமே இறைவா! நாங்கள் யாருக்கும் சிலுவையை சுமத்துபவர்களாகவும், சிலுவையாகவும் இல்லாமல், பொறுப்புள்ளவர்களாக - பொறுமையோடு வாழ்ந்து, எங்கள் வாழ்வை மாத்திரம் அல்ல பிறரது வாழ்வையும் காத்துக்கொள்ளும் வரம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



## <u>மூன்றாம் நிலை</u>
## இயேசு முதல் முறை தரையில் குப்புற விழுகின்றார்

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

கடந்த இரவுக்கு பிறகு இயேசு ஒன்றும் சாப்பிடவில்லை. எதையும் குடிக்கவுமில்லை. இரவெல்லாம் உறங்காமல், அடிபட்டு, மிதிபட்டு, முள்முடி சூட்டப்பட்ட இயேசுவுக்கு என்ன நடந்திருக்கும்?

**படை வீரன் 1:** ம்ம்ம் வேகமாய் நட.
**படை வீரன் 2:** என்ன இப்போதே தடுமாறுகிறாய். இங்கேயே விழுந்துவிட்டாய்.
**படை வீரன் 3:** என்ன திமிராய் தெருக்களில் போதித்தாய். ம்ம் எழுந்து நட.

**<u>சிந்தனை:</u>**

1. வாழ்க்கையில் எதற்குமே இரண்டு பக்கங்கள் உண்டு:
நன்மை - தீமை, இரவு - பகல், ஏற்றம் - இறக்கம், உயர்வு - தாழ்வு, வெற்றி - தோல்வி. தம் வாழ்வின் அடுத்த பக்கத்தையும் சந்தித்து, தான் முழு மனிதன் என்பதற்கு சான்று உரைக்கின்றார் நம் இயேசு. புடமிடப்படாத தங்கம் ஜொலிக்காது. அரைக்கப்படாத சந்தனம் மனம் வீசாது, மூழ்கி தேடாத முத்து கைக்கு எட்டாது, வீழ்ந்து எழாத மனிதன் பக்குவப்பட முடியாது. வீழ்ச்சிகள் வாழ்வில் வரும். வீழ்ச்சியை கண்டு அச்சப்பட்டு துணிவிழந்தால், வாழ்வில் எழுவது எப்போது? " அவர்கள் வீழ்ந்தாலும் வீழ்ந்து கிடக்கமாட்டார்கள். ஆண்டவர் அவர்களை தூக்கி நிறுத்துவார்."
2. மழைத்துளி விழுகிறது - மண் வளமடைகிறது.
அருவி விழுகிறது - ஆறாக பாய்ந்தோடுகின்றது.
பழுத்த இலை விழுகின்றது - இளம் தளிர் உருவாகுகிறது.
நாமும் விழுவது எதனால்? வீழ்ச்சியை கண்டு கலங்குவது எதனால்?
ஏழ்மையினாலா? புரிந்து கொள்ளாத நட்பினாலா? வேலையின்மையாலா? கடன் தொல்லைகளாலா? நோயாலா? அல்லது விட முடியாத தீய பழக்கங்களாலா?
ஏன் விழ்ந்துகிடக்கிறோம்? வீழ்ச்சி எழுச்சி இவை இரண்டும் நாணயத்திற்கு தேவையான இரண்டு பக்கங்கள் போன்றவை. நாணயமான வாழ்விற்கும் இந்த இரண்டுமே அவசியம்.
3. வீழ்ந்தால் எழுவோம் என்பதே நமது நம்பிக்கையாக வேண்டும். நம்மிடம் உள்ளது கோழை உள்ளம் அல்ல. அன்பும், வலிமையும், கட்டுப்பாடும் கொண்ட உள்ளமே. பேதுரு "நானும் கடலில் நடந்து வர கட்டளையிடும்" என்று இயேசுவிடம் கேட்டபோது, நடந்துவர சொன்னவர். கடலில் மூழ்கி போனபோது, கரம் நீட்டி காப்பாற்றி 'அச்சப்படாதே' என தூக்கிவிட்டவர் இயேசு. இருந்தாலும் அச்சத்தால் இயேசுவை மறுதலிக்கிறார் புனித பேதுரு. அச்சைத்தை உள்ளத்திலிருந்து எறிந்தால் மட்டுமே எழ முடியும். எதற்கு நாம் அஞ்ச வேண்டும்? காட்டிக்கொடுப்பதற்கு அஞ்ச வேண்டும், பாவம் செய்ய அஞ்சவேண்டும், அநீதிக்கு துணைபோக அஞ்ச வேண்டும், பிறர் வாழ்வை கெடுக்க அஞ்ச வேண்டும், பிறரை அடக்கி ஆள அஞ்ச வேண்டும், அயலாரின் உரிமைகளை பறிக்க அஞ்ச வேண்டும்.

4. நமக்கு அஞ்சாமையும் வேண்டும். எதற்கு?
உண்மையை உரக்க சொல்ல அஞ்ச வேண்டாம், நீதியை நிலைநாட்ட அஞ்ச வேண்டாம், நற்செய்தியை பறைசாற்ற அஞ்ச வேண்டாம், நன்மை செய்ய அஞ்ச வேண்டாம், எளியவர்களின் சார்பெடுக்க அஞ்ச வேண்டாம்.
எனவே தான் இயேசு பல முறை சொன்னார்: " அஞ்சாதே! கலங்காதே! நான் உன்னோடு இருக்கிறேன்" எனவே நமக்கு தெய்வபயம் தேவை.
தெய்வபயம் - நாம் கீழே விழுந்தாலும் எழச்செய்யும். மறுதலித்தாலும் மன்னிப்பை பெற்றுத்தரும்.
இயேசு எழுந்து நடந்தது போல, நாமும் எழுவோம், பிறரை எழ செய்வோம்.

**செபம்:**
வீழ்ந்து எழுந்து நடந்தவரே! வாழ்விலே வீழ்ந்து, சோர்ந்து, தளர்ந்து போய் இருக்கின்ற உள்ளங்களை இனம் கண்டு உதவிடவும், நீர் எப்போதும் உடன் இருக்கின்றீர் என்ற இறைவிசுவாசத்தோடு நாங்கள் அச்சத்தை அகற்றி எழுந்து நடக்க கரம் நீட்டும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>நான்காம் நிலை</u>**
**இயேசு தன் தாயை சந்திக்கிறார்**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

தாயும் சேயும் சந்திக்கும் இந்த நிலையில் யார் யாருக்கு ஆறுதல் கூறப்போகிறார்கள். பெற்ற மகன் குற்றவாளியாக நிற்கும் நிலை கண்ட தாயுள்ளம் என்ன உரைத்திருக்கும்?

**அன்னை மரி:** மகனே இந்த நிலையிலா நான் உன்னை பார்க்க வேண்டும்? நீ வாழ்வு வழங்க வந்த இந்த யூதர்களே உன்னை சாவுக்கு கையளித்துவிட்டார்களே! ஆனாலும் மகனே இது உனக்கு அவமானம் அல்ல தண்டனையும் அல்ல. இந்த மனுக்குலம் மீட்பு பெறுவதற்கு, இந்த மனிதர்கள் நல்வாழ்வு பெறுவதற்கு, நீ உழைத்ததால் கிடைத்த பரிசு. கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்து போ! உன் பயணப்பாதையில் நான் உன்னுடன் இருக்கிறேன். மகனே உனது இந்த கோர நிலையை பார்த்து, எனது உள்ளம் பரிதவிக்கின்றது.

**<u>சிந்தனை:</u>**

1. நம் இதயங்களை பக்குவப்படுத்திக் கொள்ள இந்த நான்காம் நிலை. இரண்டு இதயங்கள் இங்கு சந்தித்து கொள்கின்றன. இந்த இதயங்கள் நமக்கு கற்றுக்கொடுக்கும் பாடங்கள் அளவற்றவை. ஏழை எளியவர்களை அன்பு செய்த இதயம், துன்பத்தில் இருப்பவர்களை பார்த்து ஆறுதல் மொழிந்த இதயம், தேவையில் இருப்போரை தேடிச்சென்று உதவிய இதயம், எப்போதும் மக்களின் துயர் நீக்க பரிந்து பேசும் இதயம், பாவிகளை மன்னித்து அரவணைத்த இதயம், தவறு செய்பவர்களை குறித்து மனம் வருந்திய இதயம், தொலைந்து போனவர்களை தேடிச்சென்ற இதயம், ' ஆகட்டும்' என்று தன்னை முழுமையாக கையளித்த இதயம். இந்த இதயங்களை போல நமது இதயங்களும் இருக்க வேண்டும்.
2. தாயை போல பிள்ளை சென்ற இடமெல்லாம் தன்னலம் பாராது, எல்லோரும் வாழ்வு பெற செய்தார் இயேசு. இதன் வழியாக அவர் எல்லோருக்கும் எல்லாம் ஆனார். இதனால் அற்புதங்கள், அதிசயங்கள் அரங்கேறின. யார் எப்படி இருந்தால் எனக்கென்ன? அடுத்த வீட்டின் கூரையை சாம்பலாக்கும் தீ, என் வீட்டு கூரையை பதம் பார்க்கும் வரை - அது அவன் செய்த பாவம், அவன் தலையெழுத்து சீரழிகின்றான் என்றே தத்துவம் பேசுகிறோம் நாம். நான் எனது என்ற நிலையே இன்று தலைதூக்கி உள்ளது.
3. தனி மரம் தோப்பாகாது. ஒரு தீவு போல தனித்து வாழ்வது என்பது நம் வாழ்விற்கு ஒத்து வராது. சுயநலப்பேயை விரட்ட முற்படும் போது தான் இலட்சியங்கள் நிறைவேறும். தன்னலமற்ற அன்பே இலட்சியவாதிகளை உருவாக்கும். நான் என்ற நிலையில் இருந்து நாம் என்ற நிலையை அடையும் போதே இந்த நானிலம் செழிக்கும். இயேசுவின் இலட்சிய பயணத்தில் முழு பங்களிப்பும் தந்தவள் நம் அன்னை மரியாள்.

4. பிள்ளைகள் வாழ்வில் தோல்வியை சந்திக்கும் போதெல்லாம் வெற்றிபெற துணை நிற்கும் தாய்மார்களாக, பிள்ளைகள் என்ன செய்யலாம் என தவிக்கின்ற போது வழிக்காட்டும் பெற்றோர்களாக, நல்லதை செய்துகொண்டே இருக்க வேண்டும் என உற்சாகமூட்டும் தாய்மார்களாக, உழைத்து வாழ வேண்டும் என்று உழைக்க சொல்லி தரும் தந்தையர்களாக, தவறு செய்யும் போது கரிசனையுடன் கண்டித்து திருத்தும் பெற்றோர்களாக, விசுவாசத்தில் தளரும் போது நம்பிக்கை ஊட்டும் தாய்மார்களாக, பிள்ளைகளுக்காக தங்கள் சுய விருப்பு வெறுப்புக்களை தியாகம் செய்யும் பெற்றோர்களாக, மொத்தத்தில் நம்மில் எத்தனையோபேர் அன்னை மரியாளை போல அன்பிலும்,பக்தியிலும், விசுவாசத்திலும், இரக்கத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம் பிள்ளைகளை சரியான விதத்தில் வளர்க்கிறோமா? சிந்திப்போம்.....

**செபம்:**

அன்புள்ளம் கொண்ட இயேசுவே! உம்மை போல, அன்னை மரியாளை போல எம் தாய்மார்களும், தந்தைமார்களும் தம் பிள்ளைகளின் வாழ்வில் நம்பிக்கை ஊட்டுபவர்களாக, இலட்சிய பாதையை சுட்டிக்காட்டுபவர்களாக, பறந்து, விரிந்த இரக்கம் கொண்டவர்களாக வாழும் இதயம் தந்தருளும். - ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**ஐந்தாம் நிலை**
**இயேசு சிலுவை சுமக்க சீமோன் உதவுகிறார்.**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

இயேசு சிலுவையோடு நடக்க பெரும் பாடுபடுவதை, யூதகுருக்கள் பார்த்தார்கள். அவர் வழியில் இறந்துவிடக் கூடாது, சிலுவையில்தான் சாக வேண்டும் என்று எண்ணி என்ன செய்தார்கள் தெரியுமா?

**படைவீரன் 1:** இவன் சிலுவையை சுமந்து வர கஷ்டப்படுகிறான் என்ன செய்வது?
**படைவீரன் 2:** ம்ம்…இவன் இந்த சிலுவையை சுமந்து கொண்டு கல்வாரிவரை வர மாட்டான் போல் இருக்கிறதே!
**படைவீரன் 3:** ஆ..அங்கு ஒரு விவசாயி வருகிறான். அவனை பிடித்து சற்று நேரம் சுமக்க வைப்போம்.
**படைவீரன் 1:** ஏய் இங்கே வா. உன் பெயர் என்ன?
***சீமோன்:*** சீமோன்.
**படைவீரன் 2:** சரி இவனுடன் சிலுவையை தூக்கிக்கொண்டு வா.
***சீமோன்;*** என்ன நானா. என்னை விட்டுவிடுங்கள்.
**படைவீரன் 3:** தூக்கிக்கொண்டு வா. இல்லை என்றால் அடிப்பட்டே சாவாய்.
***சீமோன்:*** என்னை ஒன்றும் செய்து விடாதீர்கள். நான் சுமக்க உதவி செய்கிறேன்.

**சிந்தனை:**

1. ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தார், நலமற்றவருக்கு சுகத்தினை பகிர்ந்தார், வேதனையில் இருந்தவருக்கு ஆற்றலை பகிர்ந்தார், இறந்தவருக்கு உயிர் மூச்சை பகிர்ந்தார் இயேசு. வாழ்வில் நாம் பிறரோடு பகிர முற்பட்டால், நாம் தேவையில் இருக்கும் போது நமக்கு உதவ ஆட்கள் இருப்பார்கள். நல்ல சமாரியனை போல, அவரின் வேதனையில் துணைநிற்க ஒரு உள்ளம் முன் வந்தது. விழுதுகள் வேரை தாங்கிய அதிசயம். வேதனைகள் பகிரும் போது பாதியாக குறைகிறது.
2. நாம் துயரத்தில் உள்ள போது, நமது துயரத்தை பகிர்ந்தால் நல்லதே என நினைத்து ஆட்களை தேடுவது உண்டு. நம்மிடம் உள்ள செல்வத்தை, கல்வியை, பொருளை பகிர்வது மட்டும் பகிர்வாகாது. மாறாக ஆறுதலை, அன்பை, மன்னிப்பை, மகிழ்வை, புன்னகையையும் பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும். அப்போது தான் இறுதி தீர்வை நாளில் நோயுற்றிருந்தேன், சிறையில் இருந்தேன், அன்னியனாய் இருந்தேன் என்னை பார்க்க வந்தீர்கள் என்று கூறி பேறுபெற்ற நிலைக்கு அழைத்து செல்வார் கடவுள்.
3. சிறியவர்களாய், வறியவர்களாய், இயலாதவர்களாய் யாரெல்லாம் சமூகத்தில் உண்டோ அவர்களை இனம் கண்டு உதவிடும் போது அதனை இறைவனுக்கே செய்கின்றோம் என்பது உண்மை. சீமோனை போன்று கைமாறு கருதாமல் உதவும் போது தான் இயேசுவின் இரத்தம் நம்மில் பாய்ச்சப்படுகிறது. கனிவும் இரக்கமும் உள்ளவர்களாக இளைய சமுதாயம் மாற வேண்டும். நமது வாழ்வில் நாம் எந்த எண்ணத்தோடு பிறருக்கு உதவுகிறோம்? விளம்பரத்திற்காகவா? இலாபத்திற்காகவா? புகழுக்காகவா? மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகவா? சிந்திப்போம் ..

4. சமுதாயத்தின் புரட்சிக்காக முப்பத்திமூன்று வயது இளைஞனாக இருந்தபோது இயேசு தனது உடலையும், இரத்தத்தையும் உலகத்திற்காக பகிர்ந்து கொண்டார். அவருடைய கல்வாரி பயணம் நிறைவுபெற சீமோன் உதவியது இன்றும் நம்மால் நினைத்து பார்க்கக் கூடிய ஒரு வரலாற்று நிகழ்வு. எதிர்கால திருச்சபையை கட்டிக் காப்பவர்களாகிய இன்றைய இளைஞர்களே எழுந்து நில்லுங்கள். எழுச்சி பெறுங்கள்.

**<u>செபம்:</u>**

நாங்கள் வாழ்வு பெற தரணிக்கு வந்த இயேசுவே! துவண்டிருந்த நிலையில் உமக்கு உதவி கரம் நீட்டிய சீமோனை போல, தளர்ந்து கிடக்கும் எம் சமூகம் துளிர்த்து எழ, உம்மை போல உழைக்கும் மனத்தையும், உதவும் தாராள உள்ளத்தையும் எமக்கு தாரும். எம் இளைஞர்களுக்கு இத்தகைய சக்தியையும், ஆற்றலையும் அளித்தருளும். - ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>ஆறாம் நிலை:</u>**
**வெரோனிக்கா இயேசுவின் திருமுகத்தை துடைக்கிறாள்**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

இயேசுவின் அழகு முகம் பொலிவிழந்து தோற்றமளிக்கிறது. வேர்வையும், குருதியும் அவர் கண்களை மறைக்கின்றன. சூழ்ந்திருந்த அவரது எதிரிகள் நடுவில் ஒரு வீரப் பெண்மணி..........

**வெரோனிக்கா:** என்ன இது உமக்கு ஏன் இந்த நிலை. உம்மை கொடுமையாய் சிதைத்துள்ளனரே!
**படை வீரன் 1:** யார் இவள்? ஒரு யூத பெண்ணுக்கு எத்தனை தைரியம். இந்த கூட்டத்திலும் இவன் முகத்தை துடைக்க முன்வருகிறாள்! இவரோடு சுற்றிக்கொண்டிருந்த சீடர்களே ஓடிவிட்டனர். இந்த பெண்ணுக்கு மட்டும் என்ன துணிச்சல்?

**<u>சிந்தனை:</u>**

1. பலரின் கண்ணீரை துடைத்தவருக்கு, பலரின் வேதனையை நீக்கியவருக்கு, பலருக்கு உதவி செய்த கரங்களுக்கு நன்மை செய்ய முன்வந்தன இந்த இரண்டு கைகள். இந்த நிலையிலும் இயேசுவின் நன்மைதனம் வெளிப்பட்டது. நன்மை செய்யும் ஒவ்வொருவருக்குமே அவரின் அன்பு வதனம் முழுமையாக, ஆழமாக இதயத்தில் பதியும். நற்செயல்கள் புரிவதற்காகவே நாம் படைக்கப்பட்டிருக்கின்றோம்.
2. இயேசுவின் கரங்கள் நமக்கு வேண்டும். இறைவார்த்தை அடங்கிய ஏட்டுச்சுருளை எடுத்து வாசித்த கரங்கள் அவை, அப்பத்தை பலுக செய்த கரங்கள் அவை, பாவிகளை மன்னித்து அரவணைத்த கரங்கள் அவை, பரம தந்தையை நோக்கி செபித்த கரங்கள் அவை, இறந்தவரை உயிர்ப்பித்த கரங்கள் அவை, அத்தகைய அழகிய கரங்களை துணிவோடு பற்றிக்கொண்டார் வெரோனிக்கா.
3. இன்று செல்லும் வழியில் முட்கள் இருந்தால், தாண்டி செல்பவர்களாக இல்லையா நாம், அடிபட்டு கிடப்பவர்களை கண்டாலோ, உதவி கேட்பவரை கண்டாலோ, அனுதாபத்தோடு நிறுத்திக்கொள்கிறோமே. மணிக்கணக்கில் செய்யும் போதனையை விட ஒரு கணமே செய்யும் நன்மை எவ்வளவோ மேலானது. நன்மை செய்வோர் கடவுளிடமிருந்து நன்மை பெறுவர். உன்னால் முடிந்த நன்மைகள் எல்லாம் செய், உன்னால் முடிந்த முறைகளில் எல்லாம் செய். உன்னால் முடிந்த இடங்களில் எல்லாம் செய், உன்னால் முடிந்த நேரங்களில் எல்லாம் செய். உன்னால் முடிந்த மக்களுக்கு எல்லாம் செய்.

4. இரத்த நாளங்கள் எல்லாம் வெடித்து, கசை அடியும் சிலுவை பாரமும் தோள்களை அழுத்த, கால்கள் வலுவிழந்து தடுமாறி தளர்வுற்ற நிலையில் இயேசு இருந்த போது கல்நெஞ்சம் படைத்த யூதர்கள் மத்தியில், கல்லுக்குள் ஈரமாய், ஈட்டியும் வாள்களும் கையில் ஏந்திய நய வஞ்சகர்களுக்கு மத்தியில் மனதில் ஓரத்தில் ஈரம் கசிந்த வீர நங்கை வெரோனிக்கா. சரியானதை, சரியான நேரத்தில் செய்ய வெரோனிக்கா துணிச்சலுடன் முன்வந்தாள். அவளது இந்த செயல், இரத்தம் தோய்ந்து தளர்வுற்றிருந்த இயேசுவுக்கு ஆறுதலாய் இருந்தது. அதனால் தனது முகத்தின் சாயலையே இயேசு பரிசாக்குகின்றார். சமூகத்தின் கட்டுப்பாடுகளை களைந்து, நம் சமூகத்தில் காணப்படும் அவலங்களை களைய இன்றைய பெண்கள் தங்களுக்குள் இருக்கும் சக்தியை வெளிகொணர்ந்தாலே, வையகமே துளிர்க்கும், பெண்மை மிளிரும்.

**<u>செபம்:</u>**

செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய சொல்லி தந்த இயேசுவே! தடைகள் நிறைந்த இந்த சமுதாயத்தில் சரியானதை, சரியான நேரத்தில் செய்யும் துணிச்சலையும், நல்ல உள்ளத்தையும் உயிரையும் தாரும். எங்கள் கைகள் வரிந்து பரந்த கைகளாகவும்,மற்றவரின் துன்பத்திலே கை கொடுக்கும் கைகளாகவும், இதன் வழியாக வாழ்விழந்த மனிதருக்கு வாழ்வின் நம்பிக்கை கீற்றாக செயல்பட வரம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>ஏழாம் நிலை:</u>**
**இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்.**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

"மனம் வலுவானது. உடல் வலுவற்றது" என்று பேதுருவிடம் இயேசு கூறினார். இப்போது தம் தந்தையின் திரு விருப்பத்தை ஏற்று, கொடிய சாவிற்கு தம்மையே கையளிக்க கலங்காமல் முன்னேறுகிறார். ஆனால் நைந்து போன அவர் உடலால் அவருடன் ஒத்துழைக்க இயலவில்லை.

**படைவீரன் 1:** என்ன தொன்னூறு வயது கிழவன் போல் தள்ளாடி தள்ளாடி நடக்கின்றாய்?
**படை வீரன் 2:** என்ன வீரமாய் போதித்தாய்? உனது வீரம் எல்லாம் எங்கே? நட சீக்கிரம். நேரமாகிறது.
**படை வீரன் 3:** அடடே யூதர்களின் அரசன் என சொல்லிக்கொண்டான், இப்போது பார் யூதர்களின் அரசன் மன்னை கவ்விவிட்டான். தொட்டு தொட்டு குணமாக்கியவன் மண்ணை தொட்டுக்கொண்டு கிடக்கின்றான். ம்ம் எழுந்து நட சீக்கிரம்.

**<u>சிந்தனை:</u>**

1. அன்று இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் நதியை விட்டுத் திருப்பினார். பின்னர் பாலைநிலத்திற்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு நாற்பது நாட்கள் உண்ணாமலும், உறங்காமலும் இருந்தார். நீர் இறைமகன் என்றால் இந்த கல் அப்பமாகும்படி கட்டளையிடும் என்றது சாத்தான். என்னை வணங்கினால், உலக அரசுகள் உமதாகும் என்று சொன்னான். மூன்றாம் முறையாக, நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கிழே குதியும் உம்மை பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்கு கட்டளையிடுவார் என்றான்.
2. உடல் பசி, வசதி பசி, அதிகார பசி போன்ற சோதனைகளை வென்றவர் இயேசு. உடல் உள்ளம் சார்ந்தவைகளை பல மடங்கு கொடுப்பதாக வாக்களித்தாளும், அவற்றில் விழாமல் இருந்ததற்கு காரணம், இயேசு தந்தை மீது கொண்டிருந்த பாசமும், பாலைவனத்தில் அவர் மேற்கொண்ட யாகமும் தான்.
3. இன்று அதிகாரத்திற்காகவும், பணத்திற்காகவும், புகழுக்காகவும் தொடரும் கொலைகள், கொள்ளைகள் இயேசுவை போல் நாம் எதிர்த்து போராடவில்லை என்பதைதான் குறிக்கின்றது. நம் எல்லோருக்கும் ஒரு அழைப்பு உண்டு. சோதிக்கப்படுவது என்பது மனித தன்மை. ஆனால் சோதனைகளிலிருந்து எழத்துடிப்பது தான் தெய்வத்தன்மை. கால்களில் பலமிழந்து, நடை தளர்வுற்று கீழே விழுந்தாலும், அப்படியே விழ்ந்துகிடக்காமல் துணிவுடன் எழுந்து நடக்கின்றார் இயேசு. இந்த வீழ்ச்சி நமக்கு தரும் பாடம் என்ன?

4. நம் உடல் தூய ஆவியின் ஆலயம் என்று அறைகூவல் விடுத்த புனித பவுலடியாரின் வார்த்தைகள் வாழ்வாக்கப்பட வேண்டும். உடலின் பாவ நாட்டங்களை விடுத்து தூயவர்களாக நாம் மாற வேண்டும்.அன்று பாலைவனத்தில் இயேசு சந்தித்த அதே சோதனைகள் இன்றும் நம் அன்றாட வாழ்க்கையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த சோதனைகளில் நாம் வீழ்ந்து கிடக்கிறோமா? அல்லது விழிப்புடன் சுதாகரித்துக்கொள்கின்றோமா? சோதனைகள் தடுமாற்றத்தை தரலாம், தோல்விகள் கலக்கமடைய செய்யலாம். அவமானம் நம்மை விரக்தி அடைய செய்யலாம். ஆனால் நான் நொறுக்கப்பட்டேன், தளர்வுறவில்லை என்ற புனித பவுலின் மனநிலையோடு இலக்கை அடையும்வரை உறுதியோடு பயணித்தால் மட்டுமே வாழ்வு பெறுவோம். நமது இலட்சியம் சோதனைகளை வென்று சாதனைகளை படைப்பவைகளாகவே  இருக்க வேண்டும்.

**செபம்:**

சோதனைகளையும் சாதனைகளாக்கிய இயேசுவே!
எங்களின் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் சோதனைகளில் நாங்கள் வீழ்ந்துவிடாமல், மனபலமுள்ளவர்களாக, அருள்பலமுள்ளவர்களாக, வாழ வரம் தாரும். இலட்சிய பயணத்தில் தடுமாறும்போது, நாங்கள் உறுதியோடு எழுந்துநடக்க பலம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**எட்டாம் நிலை:**
**எருசலேம் மகளிருக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்.**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

கருணையே உருவான இயேசுவை பிடித்து கொலைகளத்திற்கு கொண்டு செல்கிறார்கள் என்ற செய்தி, எருசலேம் நகரில் காட்டுத்தீ போல் பரவியது. அவரது படிப்பினையை கேட்டு, உடல் நோய்களிலிருந்து சுகமும், பேய்களின் பிடியிலிருந்து விடுதலையும் அடைந்த பலர், மிக வருந்தி, தெருக்களில் குழுமினர். பெண்கள் அழுது புலம்பி, தங்கள் துயரை வெளிப்படுத்தினர்.

**பெண்கள்:** ஐயோ இயேசுவே!
**பெண் 1.** இவர் யாருக்கு என்ன தீங்கு செய்தார்? பிறருக்கு நன்மை செய்த இவருக்கா இந்த நிலை.
**பெண் 2.** நம்மோடு இருந்த போது எவ்வளவு புதுமைகள் செய்தார். நமக்கெல்லாம் மறையுறை கூறினாரே. ஒரு குற்றமும் செய்யாத இவரை சிலுவையில் அறைந்து கொல்லப்போகிறார்களே! இது என்ன கொடுமை.
**இயேசு:** எருசலேம் மகளிரே! எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.
**பெண் 3:** இயேசுவே உம்மால் எப்படி இப்படி பேச முடிகிறது?
**படைவீரன்:** ம்ம் நகருங்கள் நகருங்கள் . நேரமாகிறது.

**சிந்தனை:**

1. சிலுவை பயணத்தில் இயேசுவை நோக்கிய எருசலேம் பெண்களின் கண்களில் கண்ணீர். உள்ளத்தில் அன்பிருந்தால், உறவிருந்தால் மட்டுமே கண்களில் கண்ணீர் பெறுகும். இயேசுவோடு அவர்களுக்கு இருந்த அன்பின் அடையாளமே கண்ணீர் துளிகள். இயேசுவின் கண்களில் இரக்கம் இருந்தது. அவரது பார்வை ஏழைகளின் மேல், நோயாளிகளின் மேல் எப்போதும் இருந்தது. அத்தகைய கருணை கண்கள் நமக்கும் இருந்தால், பகைவர்களையும் கனிவோடு கண்ணோக்குவோம். அதர்மத்தை ஊடுருவி பார்ப்போம், பிறர் துன்பத்தை பார்த்து கண்ணீர்விடுவோம். எனவே நமது பார்வை வித்தியாசப்பட வேண்டும்.
2. தொடக்கக்கால கிறிஸ்தவர்களின் வாழ்வு முறை இன்று நம்மிடையே இருக்கிறதா? 'அவர்கள் கற்பிப்பதிலும், உறவாடுவதிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டல் செய்வதிலும் உறுதியாக நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிலும் ஈர்ப்பு தோன்றியது அவர்களை பார்த்து. இன்று நமது வாழ்க்கை பிறரை ஈர்க்கின்றதா? மனித உறவுகளே வாழ்வை கட்டி எழுப்பி அழகுபடித்துகின்றன. உறவே மனிதமாக - உறவே புனிதமாக கொண்டு வாழ்ந்தவர் நம் இறை மைந்தன்.

3. வாழ்வில் பிறப்பால், பிணைப்பால் வரும் உறவுகளும் உண்டு. இறைமைந்தனின் வாழ்வில் பிணைப்பால் வந்த உறவுகளே அதிகம் எனலாம். நாம் எல்லோரும் உறவுக்காரர்கள். திருச்சபை என்ற ஒரே உடலையும், கிறிஸ்து என்ற ஒரே இரத்தத்தையும் உடையவர்கள். ஏழை, எளியவர், பாவிகள், ஒதுக்கப்பட்டோர், ஆதரவற்றோர் இவர்களே கிறிஸ்து வழியாக நாம் பெற்ற முதன்மை உறவினர்கள். நமது உறவுகள் எதனை பெறுமையாக கருதுகின்றது? எத்தகைய உறவுகளை நமதாக்க விரும்புகிறோம்?
4. இழந்தால் மீண்டும் பெற இயலாதது மணித்துளிகள். இழந்தால் மீண்டும் பெற இயலாதது மழலைப் பருவம். இழந்தால் மீண்டும் பெற இயலாதது உயிர் மூச்சு. இழந்தால் மீண்டும் பெற முடிவது மனித உறவுகள் மட்டுமே. உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம் ஆகிறார். நமது பார்வை கிறிஸ்துவின் பார்வையாக இருக்க, நமது உறவுகள் கிறிஸ்துவின் உறவுகளாக இருக்க செபிப்போம்.

**செபம்:**

உறவுக்காக உயிரையும் கையளிக்க வந்த உத்தமரே! உமக்கிருந்த பார்வையை எங்களுக்கும் தாரும். கலைமான் நீரோடைக்காக ஏங்கி தவிப்பது போல, நாங்களும் உமது உறவுக்காக ஏங்கி தவிக்கிறோம். ஏழை எளியவர்களின் உறவில் நாங்கள் உண்மை உள்ளவர்களாயும், எங்கள் மத்தியில் உம்மை தரிசனமாக்க நாங்கள் கூரிய பார்வை உள்ளவர்களாக வாழ செய்தருளும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>ஒன்பதாம் நிலை:</u>**
**இயேசு மூன்றாம் முறை கீழே விழுகின்றார்.**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

இயேசு கல்வாரி குன்றை நெறுங்கிவிட்டார். கால்கள் கடுக்கின்றன, கைகள் நடுங்குகின்றன, கண்கள் பஞ்சடைகின்றன. உடல் சக்தி மிகவும் குறைந்து விட்டது. தள்ளாடுகிறார். தடுமாறுகிறார்.

**தலைமைகுரு:** மனுமகன் பாடுகள் படவேண்டி இருக்கிறது. என்னை அப்படி செய்வார்கள். இப்படி செய்வார்கள் என்று தீக்கதரிசனம் சொன்னாயே! இப்போது நடக்கக்கூட தடுமாறுகிறாய்?
**யூதர் 1:** நாளை ஓய்வு நாள் ஆயத்தம் செய்ய வேண்டும். இவன் இப்படி நடந்தால் நாம் கொல்கதா போய் சேர முடியாது.
**படைவீரன் 1:** இவன் இருக்கின்ற நிலமையை பார்த்தால் இங்கேயே இறந்துவிடுவான் போல் இருக்கின்றது.
**படைவீரன் 2:** தூக்கி நிறுத்துங்கள் இவனை.

**<u>சிந்தனை:</u>**

1. உடலுக்கு இரு கைகள் சக்தி தருவது போல, வாழ்வுக்கு இறைநம்பிக்கையும் தன்னம்பிக்கையும் சக்தி தருகிறது. விழுந்தவர் எழுந்தார் நடந்தார். தோல்வியிலும், துன்பங்களிலும், விரக்தியிலும் நடந்தார். விழுந்து விழுந்து எழுந்தார். நாமோ நம்பிக்கை அற்றவர்களாக தோல்விகளால் சோர்வடைந்து, துயரங்களினால் துவண்டு போய், தடைகளினால் கலங்கி போய் அவநம்பிக்கையால் தன்னை மாய்த்து கொண்ட யூதாசைப் போல வாழ்வையே மாய்த்துக்கொள்ள தீர்மானிக்கிறோமே நியாயமா? தோல்வி, சறுக்கல் கற்றுத்தருகின்ற பாடங்களை மனதில் கொண்டு சீர்தூக்கி பார்த்து இறைநம்பிக்கையுடனும், தன்னம்பிக்கையுடனும் பயணம் தொடரும் போது சாதாரனமானவர்கள் கூட சாதனையாளர்களாகிறோம்.
2. நமது நம்பிக்கையை வளர்ப்பவை அருட்சாதனங்கள். பிறப்பிலேயே நாம் இறைவனுக்கு உரியவர்கள் என்ற உரிமையை தருவது திருமுழுக்கு என்ற அருட்சாதனம். வளர்கிறோம். பலவீனத்தால் தடுமாறி விழும் போதெல்லாம் நமக்கு சக்தியை கொடுத்து இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவை பலப்படுத்துவது ஒப்புரவு என்னும் அருட்சாதனம். மீண்டும் தவறுகிறோம். மீண்டும் பாவம் செய்கிறோம். அப்போது மீண்டும் திருச்சபை நமக்கு சொல்கிறது. நம் உடலில் உள்ளது நமது இரத்தமும் சதையும் அல்ல மாறாக கிறிஸ்துவின் இரத்தமும் சதையுமே, என்ற உணர்வை உயிர் பெற செய்து கிறிஸ்துவாக நம்மை மாற்றுகிறது நற்கருணை என்னும் அருட்சாதனம்.

3. மீண்டும் தவறுகிறோம். அன்றாட அனுபவங்களில் உறுதி பெற, தளர்ந்து போகும் போது திடம் பெற, தேர்ந்து தெளிதலில் நிறைவு தந்து, நன்மைகளால் நிரப்பி, ஆற்றல்மிகு ஆக்கபூர்வமான செயல்களை செய்திட உற்சாகமூட்டுவது உறுதிபூசுதல். மீண்டும் தொடர்கிறது அருட்சாதனம். 'உன் சந்ததியை மிக பெரும் அளவில் பலுகச்செய்வேன்', என்ற யாவேயின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதும், குடும்பங்களை கோயிலாக்குவதும் திருமணம் என்னும் அருட்சாதனம். இறைவனுக்கும் நமக்கும் பாலமாக இருந்து, இயேசுவின் பிரதிநிதியாக சான்று பகர உந்துவது குருத்துவம். நோயிலும் வாழ்வு என்ற நம்பிக்கையை தந்து, மரணத்திற்கு பின்பும் வாழ்வு உண்டு என்ற உண்மையை உணர்த்துவது நோயில் பூசுதல்.
4. இவ்வாறாக, நம் வாழ்வின் தொடக்கமும் முடிவும் அருட்சாதனவழி நடக்கின்றது. எனவே ஒவ்வொரு அருட்சாதன நிகழ்விலும் நம் வாழ்வு புனிதப்படுத்தப்படுகிறது. இத்தகைய புனிதத்திற்குரியவர்களாக நாம் இருக்கிறோமா? வாழ்கிறோமா? நம்பிக்கை கொள்கிறோமா? அவநம்பிக்கை வேண்டாம். நம்பிக்கையோடு எழுவோம். அருட்சாதனங்கள் நமக்கு கற்பிக்கும் வழி வாழ்வோம்.

<u>**செபம்:**</u>

வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் எங்களோடு உறவு கொள்ளும் இயேசுவே! எங்கள் வாழ்வு நெறிப் படவும், வளப்படவும் எமக்கு நீர் கொடையாக தந்த அருட்சாதங்களில் நாங்கள் பக்தியுடன் பங்கெடுப்பதின் வழி, எம் வாழ்வை புனிதப்பாதையில் செலுத்திட உமது அருள் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>பத்தாம் நிலை</u>**
**இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

இயேசு சிலுவை சாவிற்கு தயாரிக்கப்படுகிறார். என்ன அவமானத்தைதான் அவர் சகிக்கவில்லை. கடைசியாக தம்மிடம் இருந்த ஆடைகளையும் பகிர்ந்து கொள்கிறார்.

**படை வீரர் 1:** என்ன ராஜவீக ஆடை இது. சாலமோன் கூட இதைபோல் உடுத்தி இருக்கமாட்டார். இது தையலில்லாத ஆடை. இதை கிழித்தால் ஒன்றுக்கும் உதவாது. எனவே சீட்டு போட்டு பகிர்ந்து கொள்வோம்.

**<u>சிந்தனை:</u>**

1. வானத்துப்பறவைகளையும், வயல்வெளி மலர்களையும் உடுத்தி மகிழ்ந்தவர், ஆடையின்றி நிற்க நேர்ந்தது பரிதாபம்தான்.உரிக்கும் போது காயங்களிலே ஒட்டியிருந்த ஆடைகள் விடைபெற மறுக்கும் போது பிடித்து இழுத்ததால், கொஞ்ச நஞ்ச குருதியும் புதியகாயங்கள் வழியே கொட்டித் தீர்ந்தது. மனிதம் காத்தவருக்கு, மனிதநேயமற்ற செயல் இங்கு அரங்கேறுகின்றது. ஆதாம் பாவம் செய்தான் ஆடை கொடுக்கப்பட்டது. இயேசு பாவத்தை கழுவினார், ஆடைகள் எடுக்கப்படுகின்றது.
2. மருத்துவ வசதி மனிதனின் ஆயுளை கூட்டினாலும், விஞ்ஞான வசதி உலகை குட்டி கிராமமாக சுருக்கினாலும், மனித மனமோ சுருங்கிகொண்டேதான் போகிறது. இது ஆரோக்கியமானதாக இல்லை என்பதுதான் கவலை தருகிறது. செடி கொடிகளுக்கும், விலங்குகளுக்கும் தரும் முக்கியத்துவம் கூட மனிதனுக்கு தரப்படுவது இல்லை என்பதுதான் வேதனையாக இருக்கின்றது. மனித இனம் விலங்கினம் அல்ல வெட்டியெறியப்படுவதற்கு. மனித இனம் புல்லினம் அல்ல கிள்ளி எறியப்படுவதற்கு. மனித இனம் எறும்பினம் அல்ல நசுக்கப்படுவதற்கு. அது ஓர் அரிய இனம், உயரிய இனம். அதன் மாண்பாய் காப்போம். ஒவ்வொரு மனிதனும் இன்னொரு இயேசு என்று கருதி மனிதத்தை நிலை நிறுத்துவோம்.
3. ஆடை ஒரு மனிதனுக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மனிதனின் சுயமரியாதையும் சுயகௌரவமும். இவை இரண்டும் இரு கண்களை போல. அடுத்தவரின் மரியாதைக்கு பங்கம் விளைவிக்கும் போதெல்லாம் நாம் இயேசுவின் ஆடைகளை களைகிறோம். அடுத்தவரை பற்றி இல்லாதவை பொல்லாதவை சொல்லும் போதெல்லாம் நாம் இயேசுவின் ஆடைகளை உரித்தெடுக்கிறோம். வார்த்தையால், செயல்களால், பார்வையால் நாம் அடுத்தவரை இழித்துரைக்கும் போதெல்லாம், மனித உரிமைகளை பறிக்கும்போதெல்லாம் இயேசுவை நிர்வாணப்படுத்துகிறோம்.

4. நாம் மற்றவர்களால் அவமதிக்கபடும்போது அல்லது மரியாதைக் குறைவாக நடத்தப்படுவதாக எண்ணும் போது, இயேசு பட்ட அவமானங்களை நினைவுக்கு கொண்டு வருவோம். அவர்களை உளமார மன்னிப்போம். கடினமான நமது பணிகளை முழு மனதோடு ஏற்று, மகிழ்ச்சியோடு அவற்றில் ஈடுபடுவோம். எளிமையாக வாழ கற்றுக் கொள்வோம். நம்மிடம் இருப்பவற்றை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்வோம்.

**<u>செபம்:</u>**

எங்களுக்காக அவமானப்படுத்தப்படவும், நிர்வாணப்படுத்தப்படவும் உம்மையே கையளித்த இயேசுவே! நாங்கள் யாரையும் வீணாக குறைகூறாமல், எம் சக மனிதர்களின் தன்மானத்திற்கும், கௌரவத்திற்கும் எந்த சூழ்நிலையிலும் கலங்கம் விளைவிக்காமல் எல்லோரையும் மதித்து வாழும் மனத்தை தந்தருளும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>பதினோராம் நிலை:</u>**
**இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

மூன்று ஆணிக்குள் புனித உடல் பதியப்படுகிறது. சம்மட்டிகளின் ஒலி, எதிரொலியாக கொல்கதாவையே அதிர வைக்கிறது. ஆணிகள் கை கால்களை துளைத்துக்கொண்டு சிலுவையிலே இறங்குகின்றன.அவை அவரின் இரு கைகளையும் பாதங்களையும் பதம் பார்த்தன.

**<u>சிந்தனை:</u>**

1. இயேசுவை யூதர்கள் சிலுவையில் அறைந்தது ஒரே ஒரு முறைதான் ஆனால் நாமோ அவரை தினம் தினம் அறைந்து கொண்டே இருக்கிறோம். இது குருக்கள் ஆண்டு. குருத்துவத்தின் மாண்பையும், குருத்துவம் என்பது திருச்சபைக்கு அளிக்கப்பட்ட கொடை என்பதையும் இந்த பதினோராம் நிலையில் தியானிபோம்.
2. ஒரு தாய் குருவான தன் மகனுக்கு கடிதம் எழுதுகிறாள்: "நீ திருச்சபை என்னும் தாய்க்கு மகனாகிவிட்டாய். இயேசுவினுடைய உடலை நீ ஒவ்வொரு நாளும் தொட்டுப்பார்ப்பதால், உன் கைகளை பரிசுத்தப்படுத்துகிறாய். புனிதமான கைகள் உன் கைகள். திருப்பீடத்தில் இயேசுவின் மறைபொருளான உடலையும் இரத்ததையும் நீ கையில் ஏந்துவதால், அங்கே நீ கூறும் வார்த்தைகளில் கவனமாக இரு. மக்கள் அனைவரும் உன்னை எளிதில் அணுகும் சூழலை உருவாக்கு. அன்பையும் கரிசனையையும் வெளிப்படுத்து. எல்லோருக்கும் நல்ல ஆயனாக இரு. உன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்கள் உன்னிடம் வருவதைவிட நீ அவர்களை தேடிச்செல். நீ திருச்சபைக்கும் மக்களுக்கும் கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு கொடை - இறைவனின் ஆசீர். என் அன்பு மகனே இறுதியாக உனக்கு சொல்கிறேன் உன்னை எல்லோரும் குறை கூறலாம், உன்னை அடிக்கவும் செய்யலாம் உன்னை வதைக்கவும் செய்யலாம், உன் பெயருக்கு மானபங்கம் விளைவிக்கலாம். உன் பெயர் கெடுவதால், உன்னை அடித்து சிதைப்பதால், உன் உயிரை மாய்த்தால் தான் இந்த மக்கள் திருந்துவார்கள் என்றால், அதற்கும் நான் சம்மதமே. என் மகனே ஒவ்வொரு நாளும் செபி, எப்பொழுதும் செபி, எல்லோருக்காகவும் செபி, உன்னை எதிர்ப்பவர்களுக்காகவும் செபி, ஏனென்றால் அதுவே உன்னை இறைவனோடும் மக்க்ளோடும் இணைக்கின்றது. ஒன்றை மட்டும் ஒருபோதும் மறவாதே நீ இறைவனால் திருப்பொழிவு செய்யப்பட்டவன். இறைவனுக்கு மட்டுமே சொந்தம்."
3. குருக்கள் இயேசுவின் பிரதிநிதிகள். இயேசுவின் பணியை ஆற்ற இயேசுவாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். திருப்பலியில் இயேசுவின் விலைமதிப்பில்லாத உடலையும், இரத்தத்தையும் தம் கரங்களில் ஏந்துபவர்கள். எனவே குருக்கள் பேறுபெற்றவர்கள்.

4. குருக்களைப் பார்க்கும் போது நாம் இயேசுவை பார்க்கின்றோமா? குருக்களும் மனிதர்கள் தானே! எல்லா இக்கட்டுகளுக்கும் உட்பட்டவர்கள்தானே! இவர்கள் அழைப்பு நிலைத்து நிற்க, இவர்கள் பணி சிறக்க இவர்களுக்காக செபிக்கும் குடும்பங்கள் நம்மில் எத்தனை பேர் உண்டு? நமது தவறான கணிப்புக்களால் எத்தனை குருக்களை சிலுவையில் அறைந்திருக்கின்றோம். குருக்களும் நம் குடும்பத்தில் ஒருவர் என்ற பந்த உணர்வு நம்மிடம் உள்ளதா? எனது மகனும் ஒரு குருவாக வேண்டும் என தாகம் கொண்டு செபிக்கும் பெற்றோர் நம்மில் எத்தனை பேர்? குருத்துவ பணி சிறக்க நமது ஒத்துழைப்பையும் தோழமையையும் கொடுப்போமா? இன்று அனைத்து குருக்களும் இயேசுவை போல் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்து இருக்கிறார்கள். உங்களுடைய - என்னுடைய கடமை இந்த குருத்துவத்தை போற்றுவதும், எல்லா குருக்களுக்காக செபிப்பதும், இறை அழைத்தலை தூண்டுவதும் மட்டுமே.

**<u>செபம்:</u>**

எங்களுக்காக சிலுவையில் அறையுண்ட இயேசுவே உமது பிரதிநிதிகளாக குருக்களை கண்டு கொள்ளவும், குருக்களின் பணி சிறக்க தோழமையுடன் உதவிபுரியும் மனம் தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>பன்னிரண்டாம் நிலை:</u>**
**இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்.**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

ஏறக்குறைய நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. கதிரவன் ஒளி கொடுக்கவில்லை. திருக்கோவிலின் திரை நடுவில் கிழிந்தது. நிலம் நடுங்கியது; பாறைகள் பிளந்தன. அவருக்கு எதிரே நின்றுகொண்டிருந்த நூற்றுவர் தலைவர், " இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்" என்றார்.

இயேசுவின் போதனைகளில் மிகவும் உயர்ந்தவை, அர்த்தமுள்ளவை - அவர் சிலுவையில் தொங்கும் போது மொழிந்து அந்த ஏழு அருள் வார்த்தைகள். அவற்றை இப்போது தியானிப்போம்.

**சிலுவை மரத்தின் மேலே சிந்திய இரத்தத்துவ துளிகள் சிரமதை தாழ்த்தி பணியும் தேவனின் அன்பு மொழிகள்……**

1. தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் தங்கள் செய்வது இன்னதென்று இவர்களுக்கு தெரியவில்லை
2. இன்றே நீ என்னுடன் அந்த வான்வீட்டில் இருப்பாய் என உறுதியாக உனக்கு சொல்கின்றேன்
3. அம்மா இவரே உம் மகன்; இவரே உன் தாய்.
4.என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைநெகிழ்ந்தீர்
5. தாகமாய் இருக்கிறது
6. எல்லாம் நிறைவேறிற்று
7. தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைகின்றேன்…..

இப்போது நாம் ஒரு பயிற்சியை செய்வோம். இயேசுவோடு இணைந்து, "தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று இவர்களுக்கு தெரியவில்லை" என சொல்வோம்.



உங்கள் பெயரை கெடுத்தவர்களை, உங்கள் வீட்டிற்கு இரண்டகம் செய்தவர்களை, உங்கள் வாழ்விலே மண்ணை அள்ளிப்போட்டவர்களை, ஒவ்வொரு நாளும் சண்டை இடுபவர்களை மன்னிப்போம். இறந்த இயேசுவை பார்த்து உருக்கத்தோடு, "சிலுவையில் மரித்து தொங்கிக்கொண்டிருக்கும் இயேசுவே, உம்மை முன்னிட்டு நான் எனது பகைமையை மறந்து பகைவர்களை மன்னிக்கிறேன் மறக்கிறேன்".
கிறிஸ்தவத்தின் உச்சக் கட்டமிது எனவே உங்கள் பகைமையை மறந்து அவர்களுக்காக மன்றாடுங்கள்.

**செபம்:**
மன்னிப்பின் இலக்கணமாகிய இறைவா. உம் அன்பின் மிகுதியினால் உமக்கு தீங்கு இழைத்தோரை மன்னித்து ஏற்று வாழ்வு பெற செய்தீரே, நாங்களும் உம்மை பின்பற்றி எம் பகைவர்களை மன்னிக்கும் தாராள மனதை தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>பதிமூன்றாம் நிலை:</u>**
**இயேசுவின் உடலைத் தாயின் மடியில் வைக்கிறார்கள்**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

இறைவனின் திருவுளத்தை எந்நாளும் ஏற்ற அன்னை இப்போது இறைமகனின் திருவுடலை ஏற்கிறார். இறைவனின் வார்த்தையை கருத்தாய் தாங்கியவள், இறைமகனைக் கருவில் குழந்தையாய் தாங்கியவள் இப்போது அவரது உயிரற்ற உடலை மடியில் தாங்குகிறாள்.

**அன்னை மரி:** மகனே! உன்னை இன்று சாவுக்கு கையளிக்கவா அன்று கபிரியேல் தூதருக்கு ஆம் என்று கூறினேன். உன்னுள்ளத்தையும் ஒரு வாள் ஊடுறுவும் என்று சிமியோன் சொன்னது இதை குறித்துதானா? நான் தந்தையின் இல்லத்தில் இருக்க வேண்டும் என உமக்கு தெரியாதா? என்றாயே, இப்போது தந்தையின் வீட்டிற்கே நிரந்தரமாய் சென்றாயோ? மகனே என்னுள்ளம் படும் வேதனை உமக்கு தெரியாதா? எனக்கினி யார் இருக்கிறார்கள்? ஆனாலும் மகனே உன்னை இழப்பது தான் கடவுளின் விருப்பம் என்றால் அது நிறைவேறட்டும். உன்னை இழப்பதில் இந்த மனிதகுலம் திருந்தும் என்றால் உன்னை இழப்பது எனக்கு பெருமையே.

**<u>சிந்தனை:</u>**

1. கன்னியாக கரு சுமந்த போது பலரின் ஏளனப் பேச்சுக்களை பொறுத்துக் கொண்டாள் தாய். வயிற்றின் கனியை ஈன்றெடுக்க இடம் இல்லாமல் தவித்தபோதும் பொறுத்துக் கொண்டாள் தாய். இப்போதும் மகனை மடியில் கிடத்தி விரக்தியாய் இருக்கும் போதும் பொறுத்துக் கொண்டாள் நம் தாய். இறந்த மகனை தன் மடியில் கிடத்திக் கொண்ட அன்னையின் அழுகையில் அனுதாபமோ ஆதங்கமோ இல்லை. அதில் வீரம் இருந்தது. அன்னை மரி இயேசுவுக்கு முகாரி ராகம் இசைக்கவில்லை, மாறாக இயேசுவின் அறப்பணியை முழக்கமிடுகிறார்.
2. சமுதாயத்தில் நலிவுற்றோரை ஆதரிக்க இன்று துறவிகளை அழைக்கிறார். இந்த சமுதாயத்திற்கு துறவிகள் தேவை. இறைவார்த்தையை எடுத்துறைப்பதிலும், இறைஅரசின் மதிப்பீடுகளின்படி நடப்பதற்கும், ஏழை எளிய மக்களின் உரிமைகளை தோல் உரித்துக் காட்டுவதிலும் எத்தனை உயிரிழப்புக்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். சொல்ல முடியாத அவமானங்களை பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் யார் பெற்ற பிள்ளைகளோ! ஒவ்வொரு தாயும் நினைக்க வேண்டியவை. என் வயிற்றிலிருந்து ஒரு பிள்ளையாவது துறவியாக இந்த சமுதாயத்திற்கு தொண்டாற்ற வேண்டி நான் தாரை வார்க்க வேண்டாமா? என் பங்கிலிருந்து நிறைய பிள்ளைகள் துறவிகளாகி இந்த சமுதாயத்திற்கும், திருச்சபைக்கும் பணியாற்ற வேண்டாமா?
3. யாரோ பெற்ற பிள்ளைகளை துறவி என்று ஏற்றுக் கொண்டு அவர் ஆற்றும் சேவைகளை நாம் பெற்றுக் கொண்டிருக்கின்றோமே! நமது வீட்டிலிருந்து, நமது பங்கிலிருந்து, நமது மறைமாவட்டத்திலிருந்து நிறைய துறவிகள் இறைபணியாற்ற முன் வர வேண்டும்.அன்னை மரியாளின் அழுகையோடு சேர்ந்து இந்த சமுதாயத்திற்கு நாம் தேவை என்று முழக்கமிட வேண்டாமா?

4. தம் பிள்ளைகளை பக்தியிலும் இறை ஞானத்திலும் வளர்த்து இயேசுவுக்கு பணியாற்ற வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர் நம்மில் எத்தனை பேர்? தம் பிள்ளைகளை மன தைரியத்துடன் இயேசுவுக்கும் திருச்சபைக்கும் அர்ப்பணிக்க விரும்பும் பெற்றோர் தான் இன்று நமக்கு தேவை. துறவற வாழ்வுக்கு அஞ்சி மறுக்கும் தாய்மார்களை அல்ல, கிறிஸ்துவின் பணியை உலகிற்கு அறிவிக்க தம் பிள்ளையை மனமுவந்து அனுப்பிவைக்கும் மரியாள்களையே இறைவன் எதிர்நோக்குகிறார். எத்தனை மரியாள்கள் நம்மிடம் இருக்கிறோம்?

**<u>செபம்:</u>**

மனுக்குலத்திற்காக தன் மகனையே கையளித்த வியாகுல தாயே! உம்மை போல் எம் பிள்ளைகளை இச்சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட, விழும்பின் நிலைக்கு தள்ளப்பட்ட, கைவிடப்பட்ட மக்களுக்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் அர்ப்பணிக்க எம் தாய்மார்களுக்கு வேண்டிய அருளை தாரும். ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.



**<u>பதினான்காம் நிலை:</u>**
**இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கின்றனர்.**

திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகின்றோம்
அதேனென்றால் உமது அர்ச்சிஷ்ட பாரமான சிலுவையை கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

இறை பராமரிப்பில் முழுவதும் வாழ்ந்து காட்டியவர் இயேசு. தக்க தருணத்தில் தேவையானவை அனைத்தும் அவருக்கு கிடைக்குமாறு தந்தை இறைவன் பார்த்துக் கொண்டார். யூதர்களுக்கு அஞ்சி தாங்கள் இயேசுவின் சீடர்கள் என்பதை மறைத்து வாழ்ந்த அரிமத்தியா யோசேப்பும், நிக்கோதேமுவும், இயேசு இறந்த பின் அவருக்கு பணிவிடை செய்கிறார்கள். அவரது உடலை நல்லடக்கம் செய்கிறார்கள்."நரிகளுக்கு வளைகளுண்டு வானத்து பறவைகளுக்கு கூடுகள் உண்டு. மனுமகனுக்கோ தலைசாய்க்கவும் இடமில்லை.

**ஒருவர்:** சூசை இயேசுவின் உடலை எங்கே புதைப்பது?
**சூசை:** என் தோட்டத்தில் இதுவரை யாரையும் புதைக்காத புது கல்லறை ஒன்று உள்ளது. அதில் புதைப்போம்.
**நிக்கோதேமு:** பரிசேயரே! என் பெயர் நிக்கோதேமு - இயேசுவின் நண்பர். அவர் இறந்ததை கேள்வியுற்று வெள்ளைப்போளமும், சந்தன தூள்களும் கொண்டுவந்துள்ளேன். இவற்றை அவரது உடலோடு சேர்த்து புதைப்போம்.

**<u>சிந்தனை:</u>**

1. நாம் நமது பயணத்தின் இறுதி நிலையை அடைந்துவிட்டோம். இப்பயணத்தின் முழு நிலையை அடைய வேண்டும் என்றால் நாம் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? நாமும் இயேசுவோடு புதைக்கப்பட வேண்டும். புதையும் விதையே பூவாகும். அன்பில் சிதையும் மனிதமே பிறப்பாகும். இந்த புனித வெள்ளிக்கிழமை முன்பு சென்ற புனித வெள்ளிக்கிழமைகளைப்போல இருக்கக் கூடாது. நமது வாழ்க்கையில், நமது சிந்தனையில், நமது செயலில் ஒரு சில மாற்றங்களையாவது கொண்டுவர வேண்டும்.
2. அப்போதுதான் இச்சிலுவைபாதையில் நாம் இயேசுவோடு பயணம்செய்தவர்களாய் கருதப்படுவோம். இல்லையென்றால், நானும் பத்தில் பதினொன்று, இப்பயணமும் நான் செய்த பல சிலுவைப்பாதைகளில் ஒன்று என்றாகிவிடும். கிறிஸ்து நமக்கு விடுக்கும் அழைப்பு என்ன? "தந்தையே நாம் ஒன்றாய் இருப்பது போல, இவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக."நமது ஒற்றுமையை குலைப்பவை எவை?



3. நம்மில் எத்தனையோ பயன்படாத, தேவையில்லாத அச்சம், சொற்கள், செயல்கள் உண்டு. இவை அடுத்தவரை புண்படவைக்கின்றன, அடுத்தவர் வாழ்வை கெடுக்கின்றன, அடுத்தவர் நம்மை விட்டு விலக செய்கின்றன. "இச்சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு நீங்கள் இதை செய்தபோதெல்லாம், எனக்கே செய்தீர்கள்" ன்றார் இயேசு. ஆம் நாம் பிறரின் மனதை நோக செய்தபோதெல்லாம், நம் அண்ணல் இயேசுவையே வேதனைப்படுத்துகிறோம். இத்தகைய எண்ணங்களை, கொள்கைகளை புதைப்போம். 'புதிய வானம் புதிய பூமி' என்னும் புதிய இறையரசு உலகில் மலர, இறையரசுக்கு ஒவ்வாத நமது பழைய இயல்பை புதைப்போம். நாம் நமது சுய நலத்தைப் புதைப்போம். நான் என்ற அகந்தையை புதைப்போம். பிறர் நலனுக்கு தடையாக இருப்பவைகளை, பொது நன்மைக்கு இடையூறாக இருப்பவைகளை, நமது ஒற்றுமைக்கு ஊறுவிளைவிப்பவைகளை புதைப்போம்.

4. நாம் நம்மை கிறிஸ்த்தவன், கிறிஸ்த்தவள் என்று சொல்லிக் கொள்கிறோம். எப்போது நாம் உண்மை கிறிஸ்த்தவராகிறோம்?

- நலிந்தோருக்கு உதவி செய்ய முற்படும்போது
- அழுவோருக்கு ஆறுதல் அளிக்கும் போது
- ஏழைக்குழந்தையின் கல்விக்கு உதவும் போது
- நம் இல்லங்களில் செபச்சூழலை ஏற்படுத்தும் போது
- பசித்தோருக்கு உணவளிக்கும் போது
- நீதிக்காக தோள் கொடுக்கும் போது
- இறைவார்த்தைக்கு உயிர்கொடுக்கும் போது
- அன்பியங்களை கட்டியெழுப்பும் போது
- சமதானத்தின் தூதுவர்களாக திகழும் போது
- மொத்தத்தில் வீண் கவுரவங்களையும், பிளவு மனப்பான்மையையும் விட்டுவிட்டு ஒன்றுபட்டு வாழும்போது.

நாம் கிறிஸ்தவத்திறிகு சான்று பகர்கின்றோம். நாம் கிறிஸ்தவர்கள் என்பதற்கான மேற்சொன்ன அடையாளங்களை நாம் கொண்டிருக்கிறோமா?

**<u>செபம்:</u>**
நாங்கள் ஒற்றுமையாய் இருக்க வேண்டுமென வேண்டிய இயேசுவே! நாங்கள் வீண் விவாதங்களை விட்டுவிட்டு, ஒருவர் மற்றவரை மதித்து, உம் படிப்பினைகளின் படி சகோதர அன்பில் நிலைத்து நிற்கவும், அதனால் பிறருக்கு எடுத்துகாட்டாக திகழவும், வேண்டிய வரம் தாரும். தந்தையே நாங்கள் அனைவரும் ஒன்றாய் இருப்போமாக. ஆமென்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றியை அடையக் கடவது.

**பாப்பரசரின் சொந்த கருத்துக்களுக்காக செபிப்போம்………**